செய்தி வெளியீடு எண்: 41 நாள் : 14.01.2010

## விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்துவது குறித்து முதலமைச்சர் கலைஞர் தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம்! விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்த குறுகியகால மற்றும் நீண்டகால நடவடிக்கைகள்!

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தமிழக அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளை ஆய்வு செய்யவும், இனிவரும் காலங்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்த மத்திய அரசுடன் இணைந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (14–1–2011) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய தலைமைச் செயலகத்தில் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் திருமதி எஸ்.மாலதி, நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு.க. சண்முகம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஸ்வரன் சிங், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. யத்தீந்திர நாத் ஸ்வெயின், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. கா. பாலச்சந்திரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் மா. வீர சண்முக மணி, தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையர் டாக்டர் பி. சந்திரமோகன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் திரு. அதுல் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்ற ஆண்டு இதே சமயத்தில் நிலவிய விலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அரிசி, துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றின் சில்லரை விலைகள் குறைந்துள்ளன. எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையில், நல்லெண்ணெய் தவிர, கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், பாமாயில் போன்றவற்றின் விலை சிறிதளவு உயர்ந்துள்ளது. எனினும், சர்வதேச சந்தையில் தற்போது சமையல் எண்ணெயின் விலை குறையத் தொடங்கியுள்ளதால், வருங்காலத்தில் உள்ளூரிலும் சமையல் எண்ணெயின் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. காய்கறி விலையைப் பொறுத்தவரையில், உருளைக்கிழங்கின் விலை குறைந்திருந்தாலும், பிற காய்கறிகளின் விலை பருவ மழையினால் ஏற்பட்ட சேதத்தின் காரணமாக உயர்ந்துள்ளது. காய்கறிகளின் வரத்து ஓரிரு வாரங்களில் அதிகமாக வாய்ப்பிருப்பதால், இவற்றின் விலையும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், உடனடி நடவடிக்கையாகவும், நீண்டகால நடவடிக்கைகளாகவும், உணவுப் பண்டங்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த பின்வரும்

நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் :

- தமிழ்நாட்டில் தற்போது இயங்கும் 154 உழவர் சந்தைகளை வலுப்படுத்தவும், கூடுதலாக 25 இடங்களில் உழவர் சந்தைகளைப் புதிதாகத் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- சென்னையில் தற்போது கூட்டுறவு அமைப்புகள் மூலமாக ஒரு நாளைக்குச் சுமார் 20 டன் காய்கறிகள் நியாய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. சென்னை மற்றும் பிற மாநகராட்சிப் பகுதிகளில் கணிசமான அளவு காய்கறி விற்பனை மையங்களை உடனடியாகத் தொடங்கி, காய்கறி உற்பத்தி செய்யப்படும் பகுதிகளிலிருந்து நேரடியாகக் காய்கறிகளை வாங்கி பொது மக்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- நியாய விலைக்கடைகள் மூலமாக தற்போது வழங்கப்பட்டு வரும் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் மற்றும் மளிகைப் பொருட்கள் போதிய அளவு இருப்பு வைத்து, எந்த தட்டுப்பாடுமின்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- மத்திய அரசு இதுவரை சர்க்கரையினை முன்பேர வர்த்தகத்திலிருந்து நீக்கம் செய்திருந்ததை மீண்டும் முன்பேர வர்த்தகத்திற்குக் கொண்டு வந்துள்ளது. சர்க்கரை விலையைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைக்க, முன்பேர வர்த்தகத்திலிருந்து சர்க்கரையைத் தவிர்க்க மத்திய நிதியமைச்சருக்கு உடனடியாகக் கடிதம் அனுப்பப்படவேண்டும்.
- நீண்டகாலத் திட்டமாக பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்க சிறப்புத் திட்டங்களைத் தீவிரமாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- நகரங்களை ஒட்டியுள்ள கிராமங்களிலும், உழவர் சந்தையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காய்கறிகளைப் பயிரிட வாய்ப்புள்ள கிராமங்களைக் கண்டறிந்து, தரமான விதைகளை வழங்குதல் மற்றும் பல்வேறு வேளாண் யுக்திகளை விவசாயிகளிடம் பரப்பி, காய்கறி சாகுபடி பரப்பளவையும், உற்பத்தியையும் பெருக்கிட தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- வரும்காலங்களில் விவசாயப் பொருள்களின் விற்பனை மையங்களை நவீனமயமாக்குதல், ஒருங்கிணைத்தல், போதிய குளிர்சாதனக் கிடங்கு வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த சிறப்புத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தப்பட வேண்டும்.
- விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசனம் உள்ளிட்ட பிற துல்லிய பண்ணை சார்ந்த திட்டங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி நீர்ப்பாசனப் பரப்பை அதிகப்படுத்தவும், உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- முக்கியப் பயிர்களான நெல் போன்றவற்றின் உற்பத்தித் திறனை வட்டார வாரியாக ஆராய்ந்து, திட்டம் வகுத்து, அதிகபட்ச உற்பத்தித் திறனை எட்ட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

* * *